அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

# TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

# ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் III.] JUNE, 1903-௵ ஜூன். [இலக்கம். 2.

## மனச்சாக்ஷி உரைக்கும் உண்மை.

சிறப்புப்பெற்று விளங்கிய ஒரு பெரியவர் சொல்வதாவது:— நான் சிறுபையனா யிருக்கும் பொழுது நாலாவது வயதில் ஒருநாள் என் தந்தை என்னை வயலில் வெகுதூரம் அழைத்துக்கொண்டு போனார். பிறகு அங்கிருந்து என்னை வீட்டிற்குத் தனியே போகும்படி சொல்லி அவர் வேறு காரியமாய் அப்புறம் போய்விட்டார். நான் திரும்பிவரும்பொழுது ஒரு குளக்கரை வழியாக வந்தேன். அக்குளத்தில் தெளிவான தண்ணீர் நிறைந்து அலையடித்துக்கொண்டிருந்தது. அதன் கரையோரத்தில் ஒரு பூஞ்செடி வளர்ந்து அழகாகப் பூப்பூத்திருந்தது. அதைக் கண்டபோது அதனருகே போய்ப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆசையுண்டாகியது. அதனால் நான் அந்தப் பூஞ்செடியின் பக்கத்தில்போய் நின்றேன். நிற்கையில் அங்கே கரையோரத்தில் பூஞ்செடியின் கீழே ஒரு சிறியஆமை வந்து வெயில் காய்ந்துகொண்டிருப்பதைக் கண்டேன். அதைக் கண்டவுடனே நான் என் கையிலிருந்த ஒரு சிறிய தடியைத் தூக்கி அதனால் அந்தச் சாதுவான ஜந்துவை யடிக்கப்போனேன். நான் அதுவரையில் ஒருபொழுதும் ஒரு பிராணியையும் அடித்துக் கொன்றதில்லையானாலும், அநேகம் பிள்ளைகள் அப்படிச் செய்வதைப் பலதரம்பார்த்திருக்கிறேன்; அதனால் எனக்கும் அந்தக் கொடிய காரியம் செய்யவேண்டுமென்கிற ஆசை உண்டாகியது. அதையடிக்க நான் அப்படிக் கையைத் தூக்கியபொழுது, ஏதோ ஒன்று திடீரென்று எனது சிறு கையைத் தடுத்தது; மேலும் எனது தேகத்திற்குள்ளேயே ஏதோ ஒன்று 'அது தப்பு, அது தப்பு' என்று உரத்துக் கூவிற்று. அதைக்கேட்டு நான் இதென்னவென்று ஆச்சரியப்பட்டு, ஓங்கின தடியை அப்படியே பிடித்துக்கொண்டு ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றேன். உடனே அந்த ஆமையும் பூஞ்செடியும் என் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துபோயின.

பிறகு நான் வெகு வேகமாக வீட்டிற்குப்போய் நடந்த சங்கதியை என் தாயாரிடஞ்சொல்லி, 'எனக்குள்ளேயிருந்து, அது தப்பு! என்று சொல்லிற்றே, அதென்ன?' என்று அவளை வினாவினேன். நான் சொன்னதைக் கேட்டவுடனே அவள் தன் கண்களினின்றும் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, என்னையெடுத்து மடிமீது உட்காரவைத்துக்கொண்டு, "குழந்தாய்! அது மனச்சாக்ஷியென்று சிலர் சொல்லுகிறார்கள்; அப்படிச்சொல்வது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. நமது சரீரத்திற்குள்ளே அந்தர்யாமியாக வசித்துக்கொண்டிருக்கிற கடவுளுடைய வார்த்தைதான் அது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்தவார்த்தையை நீ கருத்தாகக் கேட்டு அதன்படி நடக்க உடன்படுவாயானால், அது வரவர மிகவும் தெளிவாக உனக்குப் புத்திசொல்லி, உன்னை எப்பொழுதும் நல்ல வழியிலேயே நடத்தும்; நீ அதைக் காதுகொடுத்துக் கேளாமல் உபேக்ஷையாயிருக்கத் தலைப்பட்டால், வரவர அது கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப்போய்க் கடைசியில்

நல்ல வழியைக்காட்ட ஒருவரும் துணையில்லாமல் உன்னைத் திகைக்கும்படி விட்டுவிடும். அந்த வார்த்தையை நீ கவனித்துக் கேளாவிட்டால் ஒருபோதும் உனக்கு நல்வாழ்க்கையென்பது உண்டாக மாட்டாது. மனச்சாக்ஷியே யாவருக்கும் சரியான வழிகாட்டியாம். மனச்சாக்ஷி குற்றுமேல் வேறு சாக்ஷி வேண்டாம்'' என்று சொன்னாள்.

இந்த மனச்சாக்ஷிசெய்கிற முதல்காரியமாவது, 'இது தப்பு, இது சரி' என்று நமக்கு அறிவித்து, தப்பானதைத் தள்ளிச் சரியானதைச் செய்யும்படி நமக்கு எச்சரிக்கை செய்வதாம். மனச்சாக்ஷியினது இரஹஸியம் இதிலேதான் அடங்கியிருக்கிறது. மனச்சாக்ஷியாவது என்னவென்று யோசித்துப் பார்த்தால், அது நம்மைவிட வேறுபட்டதாகத் தோன்றவில்லை, ஆனாலும் அது நம்மிலும் வேறுபட்டதாகவுமிருக்கிறது; நம்மைவிட்டு அதை வேறாகப் பிரிக்கமுடியாதாயினும், அது நம்மில் ஒரு பகுதியாகாமல் வேறுபட்டதாகவே யிருக்கிறது. அது நமக்குள்ளேயிருந்துகொண்டு, யாவரும் ஒப்புக்கொள்ளும்படி சில சமயம் நமக்கு நல்லவார்த்தையாக இதமும் உபதேசிக்கிறது; சில சமயம் மிகவும் உக்கிரமான ராஜாதிகாரத்தோடு நம்மைக் கண்டிக்கவும் கண்டிக்கின்றது; ஆனாலும் இன்னகாரியமே செய்யவேண்டுமென்று நம்மை நிர்ப்பந்தித்துத் தீமையை யொழித்து நன்மையையே செய்விக்கும்படியான திறமை அதற்கு இல்லை.

முக்கியமாகக் கெட்ட செய்கைகளெல்லாம் கெட்ட எண்ணங்களாலேயே உற்பத்தியாகின்றன; அந்தக் கெட்ட எண்ணங்களெல்லாம், நம்முடைய உள்ளத்திலேயே உற்பத்தியாகின்றன; அந்தக் கெட்ட எண்ணங்களே பலவிதமான பாபங்களுக்கும் பிறப்பிடமாயிருக்கின்றன. நம்முடைய புத்தியில் ஒரு கெட்ட எண்ணம் எந்த மூலையிலாவது ஒளித்துக்கொண்டிருக்குமானால், அப்பொழுது உடனே நமது மனச்சாக்ஷியானது துடித்து, அப்படிப்பட்ட எண்ணம் கொள்ள வேண்டாமென்று நம்மை யிடித்து நமக்கு எச்சரிக்கைசெய்கிறது. நம்மனத்தில் நாம்நினைத்துக்கொன்வதனால் யாருக்கு என்னகேடு உண்டாகும்? ஒன்றுமுண்டாகாதே; ஆகையால் அது ஒரு குற்றமாகுமாவென்று சிலர் சமாதானம் பேசுவார்கள்; அப்படி ஒருபோதும் சொல்லக்கூடாது. நமது எண்ணங்களைத்தாம் வெகுஜாக்கிரதையாகக்காத்து வரவேண்டும்; ஏனென்றால், நாம் மனத்தில் மறைத்துவைத்திருக்கின்ற எண்ணங்களும் கடவுளுக்கு நன்றாகத் தெரியும். அன்றியும், நாம் மனத்தில்கொள்ளும்கெட்ட எண்ணம், செய்கிறகெட்ட செய்கைக்கு ஒப்பாகு மென்பது தேவனுடைய தருமநூலின் துணிபு. ஆகையால் நாம் முதலிலிருந்தே மனச்சாக்ஷிசொல்லும் எச்சரிக்கைகளைக் காதுகொடுத்துக் கேட்டுக் கெட்ட எண்ணங்கள் நம்மனத்தில் உண்டாக இடங்கொடாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அப்படி யிருப்போமானால், அப்பொழுது நமது மனமும் புத்தியும் நல்லவழியில் உறுதிப்பட்டுப் பெருந்தன்மையுடையனவாகி, எப்படிப்பட்ட உக்கிரமான தீமைகளுக்கும் எக்காலத்திலும் இடங்கொடாதவையாகிவிடும். பிறகு தீமைசெய்வதற்கு வேண்டிய அநுகூலங்கள் எவ்வளவு அதிகமாக நேரிட்டாலும், 'ஐயோ! நான் கடவுளுடைய கண்ணெதிரே இவ்விதமான கெட்ட செய்கையைச் செய்து பெரும்பாவியாவேனே? அப்படிப் பாவியாக ஒருபோதும் விரும்பேன்' என்று சொல்லும்படியான மனவுறுதிகொண்டு, எப்படிப்பட்ட கொடியசெய்கைக்கும் இடங்கொடாமல் விலக்க முயலும்படி யாகும். இப்படிப்பட்ட நிலைமையே தமக்கு வரவேண்டுமென்று ஒவ்வொருவரும் ஆவல் கொள்ளவேண்டும்; இதுவே யாவருக்கும் பேரின்பம் விளைவதற்கு முக்கியமான உபாயமாகும். மற்றத் தீயவழியால் வரும் இன்பங்களெல்லாம் மிகவும் அற்பமானவையும் அனர்த்தம் விளைவிப்பவையுமாம்—என்று சொல்லுகிறார்.

ஆகையால், ஒவ்வொருவரும் தமது மனச்சாக்ஷி செய்யும் எச்சரிக்கையை அலக்ஷியம் செய்யாமல் அது சொல்லுகிறபடி கேட்டுச் சரியாக நேர்வழியில் நடந்து நன்மை பெறுவார்களாக. புதிதாயொருவர் ஒரு ஜீவனை வருத்தத் தொடங்கும்பொழுது அவருக்கு முதலில் மனந்துடித்து உடல் நடுக்கமுண்டாகிறதென்பது யாவருக்கும் அனுபவசித்தமானாலும், இந்தப் பெரியவருடைய வார்த்தையால் அது இன்னும் நன்றாக உறுதிப்படுத்தப்படுகிறது. தேவவாக்கான அப்படிப்பட்ட மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஜீவஹிம்ஸைசெய்து பாவிகளாகாமல் ஜீவகாருணிய முடையவராகி ஒவ்வொருவரும் கடவுளுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகக் கடவரென்று வேண்டுகிறோம்.

## காக்கை.

'முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்' என்றும், 'செழும்பொழில்வாய் வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி' என்றும் கவிகள் காகங்களைப் பலவிதமாக இகழ்ந்து பேசியிருக்கிறார்கள். இதனால் காக்கைகள் நல்ல ஸஹவாசம் செய்யாமல் கெட்ட இனத்திலேயே சேர்கின்றனவென்றும், நல்ல பொருளை விரும்பாமல் கெட்ட பொருள்களையே விரும்புகின்றனவென்றும் விளங்குகின்றது. காகங்களை இப்படிப்பட்ட தன்மையுடையவைகளாகக் கடவுள் படைத்திருப்பது உலகத்திற்கு நன்மையோ தீமையோவென்று ஆலோசித்துப் பார்ப்போமானால், அத்தனையும் உலகத்திற்கு நன்மையென்றே நன்றாகத் தெரியவரும். நல்ல பொருள்களால் உலகத்திற்குத் தீங்கு ஒருபோதும் உண்டாவதில்லை; கெட்ட பொருள்களேயன்றோ

உலகத்திற்கு அபாய முண்டாக்குகின்றவை. அப்படிப்பட்ட கெட்ட பொருள்களை யொதுக்க வேண்டுமேயொழிய, நல்ல பொருள்களை நாசப்படுத்தவேண்டுவதில்லையே. இவ்வுலகத்தில் பிரதிதினம் எத்தனையோ பிராணிகள் இறந்துபோகின்றன; அப்படி இறந்தவைகளெல்லாம் அங்கங்கே அப்படியே கிடந்தால் கொடிய துர்நாற்றமெடுத்து உலகமெங்கும் அதிசீக்கிரமே அழிந்துபோகுமல்லவா? அதற்காகவே அப்படிப்பட்ட கெட்ட பொருள்களிடத்திலேயே ஆசையுள்ளவைகளாய் அவைகளை யொழிக்க அநந்தமான காக்கைகளைக் கடவுள் படைத்திருக்கிறார். இக்காரியத்திற்குக் காகம் ஒன்று இரண்டு இருந்தால் போதாதாகையால், அவை கூட்டங்கூட்டமாகவே ஸஞ்சரிக்கும் தன்மையுடையனவா யிருக்கின்றன. 'குரங்கும் காக்கையும் கூட்டங் கூட்டமாகவேயிருக்கும்' என்று ஒரு பழமொழியும் வழங்குகிறது. பிரதிதினம் பொழுது விடிந்தவுடனே நமது வீடுகளைச் சுத்தி செய்யுங் காக்கைகள் நமது வீட்டுவாயிலில் வந்து சேருவதை நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறோமே. கூலிவேலைக்காரரான தோட்டிகள் செய்யவேண்டிய வேலையையன்றோ அறிவுள்ளவையான காகங்கள் நமக்குச் செய்து நன்மை விளைவிப்பது.

அன்றியும், காக்கைகள் பின் வரப்போகிற காரியங்களை முன் அறிந்து சொல்லும் தீர்க்கதரிசியென்று இந்துக்களும் மற்றவர்களும் அவைகளை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். காக்கைகளின் பாஷையை யறிந்த புலவர்கள் அவற்றின் திறமையை மிகுதியாகப் புகழ்ந்து பேசக் கேட்டிருக்கிறோம். நாம் ஒரு இடத்திற்கு ஒரு காரியமாய்ப் பிரயாணப்பட்டுப் போகும்பொழுது காக்கை சகுனம் பார்ப்போமானால், அந்தக் காரியம் நன்றாக முடியும் முடியாதென்பதைக் காக்கை நாம் புறப்படும்போதே தெரிவிக்கும். பஞ்சபக்ஷி சாஸ்திரம் அல்லது பக்ஷிசோசியத்திற்குக் காக்கை ஒரு முக்கியமான பக்ஷியாம்.

இப்படிப் பலவிதத்திலும் பிரஜைகளுக்கு உபயோகமாகிய நல்ல பக்ஷியான காக்கையைச் சிலர் 'காக்கையில்லாத ஊர் பாவியில்லாத ஊர்' என்று பழித்துப்பேசுகிறார்கள். அப்படியானால், இவ்வுலகத்தில் காக்கையில்லாத ஊர் அதிகமாகக் கிடையாதே; அதனால் இவ்வுலகம் முழுமையும் பாவிகளே குடிகொண்டிருப்பதாக முடியுமே. மேலும், பறவைகளையும் பறவை முட்டைகளையும் பயிரையும் காகங்கள் அழிப்பதாக அவற்றின் மேல் சிலர் குற்றம் சாட்டுவார்கள். அதுவும் பிசகுதான். ஏனென்றால், இவ்வுலகத்தில் எந்தப் பிராணியும் தன் உணவுக்காகச் செய்யும் எந்தக் காரியத்தையும் நாம் கெட்டதென்று இகழலாகாது. எல்லாப் பிராணிகளிலும் மேலானவர்களென்று கொண்டாடப்பட்ட மனிதர்கள், ஒருவருக்கும் ஒரு உபத்திரவமும் செய்யாமல் ஜலத்தில் வசிக்கும் மச்சங்களையும், காட்டில் திரியும் மிருகங்களையும் அநியாயமாய்ப் பிடித்துக் கொல்லும் பொல்லாங்கைவிட இது கொடியதாகுமோ? மேலும் காக்கைகளின் கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள மற்ற எளிய பக்ஷிகளுக்குத் திறமையுண்டு; முட்டைகளைக் காகங்கள் வந்து துன்புறுத்தாதபடி பெரிய பறவைகள் வெகு பத்திரமாகக் கூடுகட்டி அதில் முட்டையிடுகின்றன; நெல் வயல்களில் நாம் ஏதேனுமொரு போலி யுருவஞ் செய்து வைத்தாலும், இறந்த காகம்போல ஒன்றைக் கட்டிவைத்தாலும், துப்பாக்கி வெடிதீர்த்தாலும், அதைக் கண்டு காக்கைகள் அங்கே வராமல் பயந்தோடிப்போகும். மனிதர்களுடைய தூண்டில்களுக்கும் துப்பாக்கிக்கும் இரையாகாமல் தப்பிப் பிழைக்கக் கடல்மீன்களுக்கும் காட்டுமிருகங்களுக்கும் ஏதாவது உபாயமுண்டோ? ஒரு உபாயமுமில்லையே!

மேலும், காக்கைகள் பயிர்த்தொழிலாளிகளுக்குச் செய்யும் உதவி மிகவும் அதிகம்; வயல்களில் பயிருக்கு அழிவு செய்கிற புழு பூச்சி முதலியவைகளைப் பிடித்துத் தின்பதற்காகவே காக்கைகள் வயல்களுக்குப் போகின்றன. காக்கைகள் இல்லாவிட்டால், பூச்சி புழுக்களால் பயிர்களுக்கு அதிகமான உபத்திரவ முண்டாகுமென்பது நிச்சயம். பலவிடங்களில் காகங்கள் ஏருழும்போது படைச்சாலின் பின்னேயே போய், மேலே கிளப்பப்படும் பல புழுக்களைப் பிடித்துத் தின்பதை நேராகக் கண்டிருக்கிறோம்.

அமெரிக்கா தேசத்திலே ஐக்கிய மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் பயிர்த்தொழில் நிர்வாக ஸபையார் காகங்களை மேலாகக் கொண்டாடுகிறார்கள். காக்கைகள் நாட்டுக்கு நன்மையையே மிகுதியாகச் செய்கின்றனவென்றும், பயிர்த்தொழிலாளிகளுக்கு அது பிரியமான நேசன் என்றும், காகங்களைக் கெட்டபக்ஷியென்று பழிக்கிறவர்களே புத்தியீனர்களென்றும் அவர்கள் பெருமையாகப் பேசுகிறார்கள்.

காக்கைகள் இப்படிப்பட்ட பெரிய உபகார பிராணியாயிருப்பதுபற்றியே இந்துக்களுடைய பூர்வீகர்கள் அவைகளுக்கு நாள்தோறும் உணவளிப்பது ஒரு பெரிய நற்காரியமென்று மதித்து, தாங்கள் பிரதிதினம் செய்யவேண்டிய வைச்வதேவம் என்னும் வைதிகச் சடங்கில் வாயஸ பலியளிக்கவேண்டியது முக்கியமான காரியமென்று தரும சாஸ்திரத்தில் விதித்திருக்கிறார்கள். இந்துக்களுக்குள் ஜீவகாருணியமும் நன்றியறிவும் தொன்றுதொட்டு வழங்கிவரும் விதம் இதனாலேயே நன்றாக விளங்குமன்றோ?

'காக்கைக்கு ஐந்து குணம்' என்று இந்துக்களில் ஒரு முதுமொழியும் நெடுநாளாக வழங்குகிறது. அந்த ஐந்து குணங்களாவன:

1. சுற்றந்தழுவுதல். — அதாவது, தன் இனத்தில் ஏதாவது ஒன்று வருந்திக் கூவினால், அதைக் கேட்டவுடனே காக்கைகள் நூற்றுக்கணக்காகப் பறந்தோடி வந்து அதற்கு உதவி செய்தல்.
2. இனத்தோடு உண்ணுதல். — அதாவது, ஒரு காக்கைக்கு ஏதாவது உணவு கிடைத்தால், அது தான் அதைத் தனியே புசியாமல் தன் இனத்தையெல்லாம்கூவியழைத்துக்கொண்டு விருந்தோடு உண்ணுதல்.
3. மக்களுக்கு உணவு ஊட்டுதல். — அதாவது, தாய்ப்பறவை தான் வெளியே போய் உணவு தேடிவந்து தன் மக்களை வாயைத் திறக்கச் செய்து அதற்குள் உணவையிட்டுப் போஷித்தல்.
4. அயல் பறவைகளுக்குக் கூட்டில்இடங்கொடுத்துக் காத்தல்.— அதாவது, கூடுகட்டத் தெரியாத குயில் முதலான பறவைகளுக்குத் தம் கூட்டில் முட்டையிட இடங்கொடுத்துத் தாமே அவயங்காத்தல்.
5. காமப்பைத்திய மின்மை. — அதாவது, ஒவ்வொரு காக்கையும், ஒரேதரம் முட்டையிட்டு அவ்வளவோடு ஆசை யொழிந்து மறுபடி குடும்ப விருத்திசெய்யக் கருதாமை. இப்படி ஒரு காகம் ஒரே முட்டையிடுவதனாலேயே ஒரே பிள்ளை பெற்றவருக்குக் காக்கைமலடென்று பெயர் வழங்கலாயிற்று. இப்படிப் பலதரம் பிரஸவ மில்லாமைபற்றியே காகங்கள் ஆயுள் குறையாமல் நெடுங்காலம் வாழ்ந்து சிரஞ்சீவியென்கிற பெயரையும் பெற்றிருக்கிறது.

'வைகறைத் துயிலெழு' என்கிறபடி காகங்கள் தாம் முதலில் அதிகாலையி லெழுந்து கூவிப் பொழுது விடிவதை யாவருக்கும் தெரிவிக்கின்றன. மழைக்காலத்தில் பொழுது விடிவது தெரியாமல் மேகம் மூடியிருந்தாலும் காக்கை பொழுது விடிவதை யறிந்து கூவும். இப்படிப்பட்ட சிறந்த குணங்கள் அமைந்த பிராணியைப் பழிப்பது நியாயமன்று.

## ஒரு கிழ எருது.

### ஒரு உண்மையான கதை.

நாட்டுப்புறத்தில் உழவுவேலை ஒழிந்தபிறகு ஒருநாள் அவ்வீட்டு யஜமானன் தன் உழவுமாடு மிகவும் களைத்துப்போயிருப்பது கண்டு, 'இனி இரண்டொரு வாரத்திற்கு இந்த எருதை ஒரு வேலையும் செய்ய விடலாகாது; பிரதிதினம் இதற்கு வேண்டிய புல்மாத்திரம் போட்டுப் பரிவுடன் காப்பாற்றி வரவேண்டும்' என்று சொல்லி அந்த எருதைப் பார்த்துப் பிரீதியுடனே அதைப் பலதரம் தட்டிக்கொடுத்து, 'எனது நன்றியுள்ள பழைய நண்பனே! நான் இப்பொழுது உனக்கு விடுமுறை கொடுக்கிறேன்; இனிமேல் நீ உழவு வேலை செய்யவேண்டாம்; வைக்கோலோ புல்லோ, உனக்கு வேண்டியதைத் தின்றுகொண்டு சுகமாய் இளைப்பாறியிரு; இதோ இந்தக் கலப்பை உன் கண்ணெதிரில் இருந்தால், அதைப் பார்க்கும்போதெல்லாம் உனக்கு உழவு நினைப்பு வந்து வருத்தமுண்டாகுமன்றோ? அப்படி வேலையின் ஞாபகமே உன் மனத்தில் தோன்றாதபடி நான் இந்தக் கலப்பையை உன் கண்ணில் படாமல் புழக்கடையில் ஒளித்து வைத்துவிடுகிறேன்' என்று சொன்னான்.

பிறகு அந்த யஜமானன் தன் பெண்ஜாதியுடனும் பிள்ளைகளுடனும் சாப்பிடப்போனான். சாப்பிட்டானபிறகு அவன் தன் பிள்ளை யொருவனை யழைத்து, 'குழந்தாய், நீ நம்முடைய கிழ எருதை அவிழ்த்துக்கொண்டுபோய்த் தண்ணீர்க்கரையிலே கொண்டு விடு; அது அங்கேயே நின்று நிதானமாக வேண்டுமளவு தண்ணீர் குடிக்கட்டும்; அதைத் திருப்பி ஓட்டிக்கொண்டு வருவதற்காக நீ அங்கேயே காத்துக்கொண்டிருக்க வேண்டாம், நீ உடனே வந்துவிடு; நமது வீட்டிற்கு வர அதற்கு வழி தெரியும்' என்று சொன்னான்.

அப்படியே அந்த மகன் எருதை ஓட்டிக்கொண்டு போய்க் குளக்கரையில் தண்ணீர் குடிக்கும்படி விட்டு விளையாடப் போய்விட்டான். இப்படி யெருதை ஓட்டிக்கொண்டுபோன சிறிது நேரத்திற்கெல்லாம் சில பிள்ளைகள் தகப்பனிடத்திற்கு வெகுவேகமாயோடிவந்தார்கள். வருகையில் அவர்களுடைய முகத்தைப் பார்க்கும்பொழுது ஏதோ ஒரு அவசியமான சங்கதி சொல்ல வந்தவர்கள் போலத் தோன்றியது. அவர்கள் இரைந்துகொண்டு ஓடிவந்து, 'அப்பா! அப்பா! எழுந்திரும், எழுந்திரும்; அதோ வயலில் பாரும். நமது கிழ எருது கலப்பை, நுகத்தடி ஒன்றுமில்லாமல் கழனியில் ஏர் உழுவதுபோலச் சுற்றிச் சுற்றி நடந்துகொண்டிருக்கிறது' என்று கூறினார்கள்.

அதைக் கேட்டு அவ்வீட்டுக்காரன் எழுந்து பார்த்து, தன் நன்றியுள்ள கிழ எருது கழனியில் ஏர் உழுவதுபோலச் சுற்றிச் சுற்றி நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தான். கிழ எருது கால்தள்ளாடுகையிலும் நிற்காமல் மெல்ல மெல்லப் போய்க்கொண்டிருந்தது. அதனுடைய மெலிந்த முதுகின்மேலும், குழி விழுந்த கண்களின்மேலும், மாலை வெயில் வீசுகையிலும், அது தன் வேலையை நிறுத்தவில்லை. வீட்டுக்காரன் அதைப் பார்த்து, 'ஐயோ! பாவம்! இதனுடைய நன்றியைப் பார்த்தீர்களா? உடனே போய் அதை வீட்டிற்கு ஓட்டிவந்து புல் போட்டு அதற்கு உங்களாலான உதவி செய்யுங்கள்' என்றான். அப்படியே அந்தப் பிள்ளைகள் தக்ஷணமே வயலுக்குப் போய் அந்த அருமையான ஜீவனைத் தட்டிக்கொடுத்து அன்புடனே அணைத்துக்கொண்டு வீட்டிற்கு ஓட்டிவந்தார்கள்.

## நாயே மனிதருக்குப் பெரும்பாக்கியம்.

மனிதர் பெற்ற பாக்கியங்களுள் மிகச் சிறந்ததும், மிகவும் உபயோகமானதும், பரிபூரணமானதுமாகிய பெரும் பாக்கியம் நாய்களேயாம். ஒவ்வொரு நாயும் தன் தன் யஜமானனுக்கு முழுமையும் அடிமைப்பட்டிருக்கின்றது; அவனவனது நடையுடை பாவனைகளையெல்லாம் தானும் அனுசரிக்கிறது; யஜமானனது பொருள்கள் இவையென்று நன்ருகக் கண்டறிந்து அவைகளை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிறது; தன் உயிர்போகும்படியான அபாயம் நேரிட்டாலும், அதையும் இலக்ஷியம்பண்ணுமல் தன் உடலில் உயிருள்ளவளவும் யஜமானனை விடாமல் அவனிடம் அதிகமான பற்றுவைத்திருக்கிறது. இப்படிப்பட்ட நன்மைகளெல்லாம் நமக்கு மிகவும் அவசியமானவையாயிருந்தாலும், நாய்களை நாம் பிடித்து நீர்ப்பந்திப்பதனுல் அவை நமக்குக் கிடைக்கலாகுமோ? ஒருபோதும் கிடைக்கமாட்டா. நாம் அவைகளை உண்மையாக நேசிப்பது ஒன்றினுல்மாத்திரமே அவை பெறக்கூடியவையாகும். அன்பிருந்தால் ஆகாதது மாகும். இப்பூமியில் எவ்விடத்திற்குப் போனுலும் மனிதனைவிடாமல் பின்தொடர்ந்து கூடவே போகிற பிராணி நாய் தவிர மற்றென்று உண்டோ? தருணம் வாய்த்தபோது தனக்குள்ள நன்றியையும் விசுவாஸத்தையும் வெளியிடாத நாயை எங்கும் காண்பதரிது. அப்படிப்பட்ட அருமையான பிராணியினிடத்தில் நாம் அன்பு பாராட்டாமலிருக்கலாமோ? 'அன்பே பிரதானம், அதுவே வெகுமானம்.'

அப்படிப்பட்ட சில நல்ல நாய்களின் கதையை இதனடியில் சொல்லுகிறோம்.

### சில நல்ல நாய்கள்.

சிறந்த புத்தியும் சாமர்த்தியமுமுள்ள சிறுவர்களோடு பழகினுல், நாய்களுக்கு நல்ல புத்தியும் அற்புதமான சாமர்த்தியமும் உண்டாகின்றன. இதற்குத்திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு; இங்கே இரண்டொன்று எடுத்துச் சொல்லுகிறோம்.

ஒரு நல்ல சிறியநாய் சிறுபிள்ளைகள் போலவே, வெகு திறமையாய்க் கண்பொத்தி விளையாட்டு விளையாட நன்ருய்ப் பழகியிருந்தது. கண்ணை மூடிக்கொள்ளும்படி அதற்குக் கட்டளையிட்டால், தன் கால்களால் அது கண்ணை நன்ருக மூடிக்கொண்டு, பிறகு ஒளித்துக்கொண்டிருக்கிற பிள்ளைகளையெல்லாம் மூலை மூலையாய் ஓடி ஒருவனைக்கூட விடாமல் எல்லாரையும் தேடிப்பிடிக்கும். அந்த நாய்க்குட்டி தான் ஒளித்துக்கொள்ள வேண்டிய முறை வந்தால், வெகு பத்திரமாய் நாற்காலியின் கீழேயோ கதவு மூலையிலோ போய் ஒளித்துக்கொண்டு, தன்னைக் கண்டுபிடிக்கப்போகிறார்களே யென்று நடுங்கிக்கொண்டிருக்கும்.

---

ஒரு உத்தியோகஸ்தனிடத்தில் ஒரு நாய் இருந்தது. அந்த நாய்க்குத் தன் யஜமானனிடத்தில் பிரீதி மிகவும் அதிகம். ஒரு சமயத்தில் அவன் சிலநாள் தேகம் அசவுக்கியமாய்ப் படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த நாய் அவனுடைய பக்கத்தை விட்டுப் போகாமல் அவனண்டையிலேயே காத்துக்கொண்டிருந்தது. ஒருநாள் அவன் கொஞ்சம் விறகு எடுத்துவர வேண்டியதாயிற்று. அப்பொழுது அவன் அந்த நாயைப்பார்த்து, 'நீயும் ஏன் கொஞ்சம் விறகு கொண்டுவரக் கூடாது, ஏன் சும்மா நின்றுகொண்டிருக்கிருய்?' என்று வெறுப்புடனே பேசினுன். அதைக் கேட்டவுடனே அந்த நாய் தக்ஷணமே விறகு தொட்டிக்கு ஓடி, அங்கிருந்து ஒவ்வொரு கட்டையாய் வாயில் கவ்விக்கொண்டு வந்து வீட்டிலே சேர்த்தது.

---

ஒரு சமயத்தில் ஒரு சீமாட்டி அழகான நாயொன்றை வளர்த்தாள். அந்த நாய்க்கு ஒருநாள் இராத்திரி ஜலதோஷத்தினுல் குளிர் அதிகமாயிற்று. அந்தக் குளிர் பொறுக்கமாட்டாமல் நாய் அதிகமாகச் சிணுங்கி அழுவதுபோலக் குரைக்கத் தொடங்கிற்று. அதுகண்டு அந்த யஜமானி தன் நாய்க்கு நல்ல கம்பளிச்சொக்காய் போர்த்து, அதை நீலநிறமான நாடாவினுல் இடுப்பண்டை யிழுத்துக்கட்டி, கழுத்தண்டையில் அந்தச் சொக்காய் விலகாதபடி பொத்தான் ஒன்று பூட்டினுள். தனக்கு நல்ல கம்பளிச்சொக்காய் போர்த்ததைக் கண்டு அந்த நாய் சிறு பிள்ளைகள்போலவே செருக்குடனே உலாவத் தொடங்கிற்று. யாராவது அண்டையயலில் உள்ளவர்கள் அந்த நாயின் அழகான உடுப்பைப் பார்க்க வரும்பொழுது யஜமானி, 'உன் உடையை எடுத்து வந்து காட்டு' என்று கட்டளையிட்டால், அந்த நாய் உடனே மேல் மாடிக்குப் போய் அதை எடுத்துவரும். ஒரு நாள் அந்த எஜமானி, 'உன் அரைக்கச்சை யெங்கே?' என்று நாயைக் கேட்டாள், அந்தக்ஷணமே அது மேல் மாடிக்கு ஓடி அதிக சந்தோஷத்துடனே நீலநிறமான தன் நாடாவை யெடுத்துவந்து யஜமானி கையில் கொடுத்தது. இந்த நாய்களின் நல்ல விவேகத்தைப் பார்த்தீர்களா?

---

## ஜீவகாருணிய விஷயத்தில் தப்பான அபிப்பிராயம்.

தங்களிடத்தில் உழைத்துவந்த குதிரைகளுக்கு வயது அதிகமாகி வேலைசெய்யச் சக்தியில்லாமற் போனுல், அப்பொழுது சிலர் அப்படிப்பட்ட குதிரைகளை வேறொருவருக்கு விற்றுப்போடுகிறார்

கள்; சிலர் அதைக் காப்பாற்ற மாதம் இவ்வளவு கொடுப்பதென்று ஏற்பாடு செய்துகொண்டு, யாராவது ஒரு குடியானவனிடம் கொடுத்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வது ஜீவகாருண்யமாகுமோ? அதை விலைக்கு வாங்கினவர்கள் அதை வருத்தப்படுத்தாமல் விடுவார்களோ? கூலிக்காரன் அதற்கு வேண்டிய தீனிபோட்டுக் கருணையுடன் காப்பாற்றுவானோ? இப்படிப்பட்ட காரியங்கள் செய்து அந்த எளிய ஜீவனை இம்சிப்பதைப்பார்க்கிலும், அதை ஒரே நிமிஷத்தில் கொலைசெய்து அதனுடைய கஷ்டத்தை நிவிர்த்திசெய்வது நன்மையானதாகும். பேசுந்திறமையிலும் சாமர்த்தியத்திலும் வாயில்லா ஜந்துக்களைப்பார்க்கிலும் சிறிது மேன்மை பெற்றவர்களாயிருக்கிற நாம், அந்த ஜந்துக்களுக்கு வீணான வருத்தம் உண்டாகும் காலங்களில், நடுவே நின்று அந்த வருத்தத்தைப் போக்கப் பாடுபடவேண்டும்.

## ஜீவகாருண்ணியத்திற்காகப் பாடுபடுகின்றவர்களுடைய முயற்சி.

ஜீவகாருணிய விஷயமாகப் பாடுபடுகிறவர்கள் ஊக்கத்துடனே செய்துவருகிற முயற்சிகள் சிற்சிலவாக நன்மைகளை விளைவித்துக்கொண்டு வருகின்றன. குதிரைகளுடைய வால்மயிரைக் கத்தரித்துவிடுவது அழகானகோல மென்கிற கொள்கை இப்பொழுது இங்கிலாந்தில் அநேகமா யொழிந்துபோயிருக்கிறது. இங்கிலாந்து அரசரும் நமது சக்கரவர்த்தியுமான மாட்சிமைதங்கிய எட்வர்ட் மன்னவர் குதிரைவாலைக் கத்தரிக்கும் விஷயத்தில் விரோதமான அபிப்பிராயமுடையவராயிருக்கிறார். அன்றியும், அமெரிக்காவின் ஐக்கியமாகாணத்து அக்கிராஸனாதிபதி, மொட்டைவால் குதிரைகட்டிய வண்டியில் தாம் ஒருபொழுதும் ஏறுவதில்லையென்று உறுதிகொண்டிருக்கிறாரென்கிற ஸந்தோஷ ஸமாசாரமும் தெரியவருகிறது. பெரிய தேசாதிபதிகளான இந்த இரண்டுபேரும் அதிகமான ஜீவகாருணியமும் நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியும் திறமையு முள்ளவர்களாயிருக்கிறார்களென்பது இதனால் நன்கு விளங்குகிறதல்லவா? இப்படி இவர்கள் முன் நடந்துகாட்டிய நல்லொழுக்கத்தை மேற்கோளாகக்கொண்டு இனிப் பலரும் பின்தொடர முயலுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புத்திகூர்மையுள்ள ஒரு நாய் யஜமானனுக்குச் செய்த வேலை.

ஒரு கனவான் சிறந்த நாயொன்றை வளர்த்து வந்தான். அவன் பிரதிதினம் தனக்கு வந்திருக்கும் கடிதங்களை வாங்கிக்கொண்டு வரும்படி அந்த நாயைத் தபாலாபீசுக்கு அனுப்புவான். அந்த நாயினுடைய சடைத்தலையைப் பார்த்தவுடனே அந்தக் கனவானுக்கு வந்திருக்கும் கடிதங்களையும் பத்திரிகைகளையும் தபாலதிகாரி கட்டி அந்த நாயின் வாயில் கொடுப்பான். அதைப் பெற்றுக்கொண்டவுடனே அதில் ஒன்றுகூட விடாமல் நாய் பத்திரமாகப் பிடித்துக்கொண்டு வீட்டிற்கு ஓடிப்போகும். இப்படி நடந்துவருகையில் ஒருநாள் அந்த நாய் தபாலாபீசிலிருந்து வீட்டிற்குப்போகிற வழியிலே பிரஜைகள் நடக்கும் பாதையோரத்தில் அப்பம் ஒன்று விழுந்து கிடந்தது. இந்த நாய்க்கு அப்பமென்றால், அதிக ஆசை; மேலும் அப்பொழுது அதற்குப் பசியும் அதிகமாயிருந்தது. அது ஜனங்கள் அதிகமாக நடக்கிற வழியாகையால், கடிதத்தைக் கீழே வைத்தால் யாராவது எடுத்துக்கொண்டு போய்விடுவார்களோ வென்கிற பயமும் அதற்கு அதிகமாயிருந்தது. அதனால் அது சற்றுநேரம் அசைவற்று நின்று ஆலோசனைசெய்து, பிறகு வாய்க்கடிதத்தைப் பத்திரமாகக் கீழே வைத்து அதை ஒரு காலால் மிதித்துக்கொண்டு, பிறகு அந்த அப்பத்தைத் தின்றுவிட்டு, பழையபடியே கடிதத்தை வாயில் கவ்விக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தது.

## ஜந்துக்களைப்பற்றிய உவமைச் சொற்கள்.

### கழுதையைப்போல மந்த புத்தியுடையவன்.

உலகத்திலே சிலர் சில மனிதர்களை 'கழுதை' என்றும் கோவேறு கழுதை யென்றும் வேறு பெயர் வைத்துக் கூவுவதை நாம் பலதரம் கேள்வியுற்றிருக்கிறோம். அந்த மனிதர்களைப் பெருமையாய்ப் புகழுவதற்கோ அவர்கள் அப்படிக் கூப்பிடுகிறார்கள்? இல்லை; அழைக்கப்பட்டவனாவது அதைத் தனக்கு ஒரு பெருமையாக நினைக்கிறானோ? இல்லை. கழுதையானது விவேகமில்லாத மூடப்பிராணியென்றும், கோவேறு கழுதை மூர்க்க குணமுள்ள அடங்காத பிராணியென்றும் நினைத்து, அவைகளைப்போல மூடர்களா யிருக்கிறார்களென்று இழிவாகப் பேசுகிறார்கள்; பேசப்படுகிறவனும் அதைத் தனக்கொரு இழிவாகவே நினைக்கிறான். இது மனிதர்களுடைய மூடத்தனமே தவிர வேறொன்றுமல்ல.

ஆலோசித்துப்பார்த்தால், கழுதைகள் மனிதர்களைப்போல அவ்வளவு மந்த புத்தி யுள்ளவையல்லவே! கோவேறு கழுதையும் அவ்வளவு பிடிவாத முள்ளவையல்லவே! இந்தப் பிராணிகளுடன் பழகுகிறவர்களைக் கேட்டால், இதன் உண்மையை அவர்கள் விளங்கச்சொல்லுவார்கள். கழுதைகள் நல்ல விவேகமுடையவைகள்; மனிதர்களைப் பார்க்கிலும் அறிவில் சிறந்த கழுதைகளும் அநேக

முண்டு. மிகவும் பிரீதியாக நடத்தினால், கழுதைகள் எவ்வளவு அடங்கி ஆட்படுகின்றன பாருங்கள். மனிதர்கள் அப்படி யில்லையே! குதிரைகளிலும், நாய்களிலும், மனிதர்களிலும் புத்தியுள்ளவைகளும் புத்தி யில்லாதவைகளு மிருப்பதுபோலவே, கழுதைகளிலும் புத்தியுள்ளவைகளும் பலவுண்டு, புத்தி யில்லாதவைகளும் பலவுண்டு. ஆனாலும், அடங்காத முரட்டுப் பிள்ளைகளையும் மந்த புத்தியுள்ள பிள்ளைகளையும் பார்த்துக் கழுதையென்று சொல்வது ஒருபோதும் தகாது; ஏனென்றால், அவ்வளவு முரட்டுத்தனமும், மந்த புத்தியுமுள்ள கழுதை உலகத்தில் ஒன்றுகூட இல்லை. அப்படிப்பட்டவர்களைக் கழுதையென்று கூப்பிடுவது அவர்களுக்குப் பெருமையாகுமேதவிரத் தாழ்மையாகாது. கழுதையானது மிகவும் பொறுமையுள்ளது; எவ்வளவு கஷ்டத்தையும் தாங்குகிற மனவுறுதியுள்ளது. அதை அன்புடனே நடத்தாமல் அலக்ஷியம் செய்வதால், அதன் நற்குணம் வெளிப்படாமல் உள்ளே அடங்கியிருக்கிறதேதவிர வேறில்லை. அதனுடைய ஜீவகாருணியமில்லாத யஜமானன் கொடியவனாயிருக்கிற காரணத்தினாலேயே, இப்படிப்பட்ட நல்ல பிராணியைப் பிறவியிலேயே மந்த புத்தி யுள்ளதென்று இழிவாக நினைத்து நிந்தனையாகக் கூறுவது சிறிதும் சரியானதாக அங்கீகரிக்கத் தக்கதன்று.

## ஆலோசனை செய்வதுபோன்ற ஆந்தை விழி.

புத்தியில்லாமலும் ஒன்றும் சொல்லத் தோன்றாமலும் ஒருவன் சும்மா விழித்துப் பார்ப்பானானால் அப்பொழுது அவனை, 'ஏன் இப்படி ஆந்தைபோல் விழிக்கிறாய்?' என்று இகழ்ந்து பேசுவது வழக்கம். இவர்கள் இப்படிப் பேசுவதனாலேயே ஆந்தை யறிவில்லாத பிராணியாகுமோ? அப்படிப் பேசுகிறவர்களே புத்தியில்லாதவர்களாவார்கள். ஆந்தை மிகுந்த புத்தியுள்ள பிராணியென்று நெடுங்காலமாகப் பல தேசத்தவர்களாலும் பெருமையாகப் புகழப்பட்டு வருகிறது. ஆந்தை பின்வரும் காரியத்தை முன் அறிந்து சொல்லும் சிறந்த சாமர்த்தியமுடையது. பக்ஷி சோசியஞ் சொல்லுகிறவர்கள் பஞ்ச பக்ஷிகளில் ஆந்தையும் ஒன்றாகக் கொண்டு பலன் சொல்லுகிறார்கள். ஆந்தையின் தேகத்தைப் பரிசோதனை செய்த தேக தத்துவ சாஸ்திரிகள் அதனுடைய கம்பீரமான முகத்தையும், மூளையையும் பார்த்து அது சிறந்த புத்தியுடையதென்று கொண்டாடுகிறார்கள். ஆகையால் ஆலோசிக்குமளவில்,

> 'அடக்க முடையா ரறிவில ரென்றெண்ணிக்
> கடக்கக் கருதவும் வேண்டா.........'

என்று சொல்லியபடி 'அறிவுள்ளவர்களுக்கு அடங்கியிருப்பதே அழகு' என்பதை அறிவிக்க ஆந்தை சிறந்த திருஷ்டாந்தமாயிருக்கிறது. அறிவுள்ளவர்கள் ஆந்தையைப்போல் அடங்கியிருப்பது மேலான கவுரவத்தை விளைவிக்கும். ஆனால் புத்தியுள்ளவர்கள் பெரிய சபையில் போனால் பேசாமல் வாயை மூடிக்கொண்டு மௌனமாயிருப்பது அந்த வல்லவர்களுக்கு மிகவும் வருத்தமாகவே தோன்றும். பெரிய சபையில் உரத்துப்பேசுவது எவ்வளவு வருத்தமானகாரியமோ! அதை நீங்களே சற்று நிதானித்து யோசித்துப் பாருங்கள். ஆகையால், பலவிடங்களிலும் உரத்துப் பேசும் சிறுவர்கள் ஆந்தையைப் பார்த்து அடக்கமுள்ளவர்களாகக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆந்தை யறிவுள்ள பிராணியென்று சொல்லச் சிறுதும் சந்தேகமில்லை; இல்லையென்று சொல்லிச் சாதிக்க ஒருவராலும் முடியாது.

## வாத்தைப்போல மதிகேடன்.

ஐரோப்பியர்கள் அநேகமாய்ப் புத்தியில்லாதவனைப் பார்த்து '(Goose) அடே வாத்தே' என்று இழிவாய்ப் பேசுவது வழக்கம். அவர்கள் ஏன் அப்படி அறிவில்லாதவர்களுக்கு வாத்தை உபமானமாகக் கொண்டார்களோ தெரியவில்லை. வாத்து புத்தியில்லாத ஜீவனென்று ஒருபோதும் சொல்லக்கூடாது. கோழியும், குள்ளவாத்தும் தாழ்ந்த இனமாயிருந்தாலும், வாத்துக்கள் அவற்றுடனே கூடி வாழும் சிறந்த அறிவு உள்ளனவாயிருக்கின்றன. பிடித்துப் பழக்காத வாத்துக்கள் மிகுந்த அறிவுள்ளவைகள். அவற்றைப் பிடிக்க எவனாவது ஸமீபத்தில் போகப் பிரயத்தனப்படுவானானால், அவை அவன் கையில் அகப்படாமல் உடனே பறந்தோடிப் போகும் புத்தி கூர்மையுடையவைகளாம்.

## மணி யேன் ஒலிக்கவில்லை?

விடுமுறைநாள் முடிந்து பாடசாலை திறக்கிற முதனாள் வந்தது. அப்பொழுது ஒரு பாடசாலையில் மாணாக்கர்கள் எல்லாரும் வந்து பாடசாலைக்கு எதிரிலுள்ள வெளியிலே விளையாடிக்கொண்டிருந்தார்கள். உபாத்தியாயர்களெல்லாரும் வந்து நாற்காலிகளில் உட்கார்ந்து, மணி யெப்பொழுது அடிக்கும்? பிள்ளைகள் எப்பொழுது வந்து அந்தந்த வகுப்புக்கு ஏற்பட்ட விடங்களில் உட்காருவார்கள்? என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, கடிகார வட்டத்தில் மணிகாட்டி முள் 10-க்குச் சரியாகவும் நிமிஷங்காட்டி முள் 11-க்கு நேராகவும் வந்துவிட்டன.

அந்தப் பாடசாலையில் பிள்ளைகளை யழைப்பதற்காக அடிக்கும் மணி வெளியே ஒரு சுவரின் மேல் கட்டப்பட்டிருந்தது. அந்த மணியைச் சரியானகாலத்தில் தலைமை உபாத்தியாயர் அடிக்

கும்படி அவர் உட்காரு மிடத்தில், அந்த மணியை ஒலிக்கச் செய்யும்படியான கருவி யொன்று அமைக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள் வந்து சேர வேண்டிய தருணமாகிவிடவே, உடனே தலைமை உபாத்தியாயர் அந்தக் கருவியை அழுத்தினர், மணியும் ஒலிக்கவில்லை; பிள்ளைகளும் வந்து சேர வில்லை; பிள்ளைகள் வெளியே விளையாடுகிற பெருங் கூச்சல்மாத்திரம் உரத்துக் கேட்டுக்கொண்டிருந்தது. இதென்ன ஆச்சரியமென்று உபாத்தியாயர் மறுபடியும் முன்போலவே மணியை ஒலிக்கும்படி செய்ய முயன்றார்; அவர் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் முடியவில்லை.

பிறகு அவ்வுபாத்தியாயர் பலகணி வாயிலைத் திறந்து கையைத் தட்டிப் பிள்ளைகளைக் கிட்ட வரும்படி குறி காட்டினர். அதைக்கேட்டு மாணக்கர்கள், அவர் ஏன் கூப்பிடுகிறாரோவென்று சிறிய போர் வீரர்கள்போல வரிசையாக வந்து நின்றார்கள். மறுபடியும் மணியை அடித்துப் பார்த்தார்; அது ஒலிக்கவில்லை. உடனே பிள்ளைகளையெல்லாம் அவரவரிடத்திலே போய் உட்காரும்படி கட்டளையிட்டு, மணி நாக்கு ஒடிந்துபோயிற்றோ என்னவோ பார்க்கவேண்டுமென்று கருமானை அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

கருமான் வந்து மணியைப் போய்ப் பார்த்ததில் அவன் அங்கே கண்ட தென்னவென்கிறீர்கள்? அந்தப் பெரியமணியின் உள்வாயில் ஒரு சிட்டுக் குருவி கூடுகட்டி, நாக்கு ஆடினல் கூடு கலைந்து போகுமென்று அந்த நாக்கை ஆடவொட்டாமல் யெப்படியோ உறுதியாகக் கட்டிவிட்டது. அதைக் கேட்டு உபாத்தியாயர் ஆச்சரியப்பட்டு ஒரு சிறிய சிட்டுக்குருவி என்னகாரியம் செய்தது பார்த்தாயாவென்று அதன் திறமையைக் கண்டு கொண்டாடி, அந்தக் கூட்டை வெளியே எடுத்துவிடலாமா? என்று கேட்டார். 'கூடாது, கூடாது' என்று அந்த நிமிஷமே பெரிய கோஷமொன்று உண்டாயிற்று.

அன்றுமுதல் பிரதிதினம் நானூறு பிள்ளைகள் அந்த விளையாட்டு வெளியில் கூட்டங்கூடி அந்தப் புதுமையான பறவைக் கூட்டை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். குஞ்சுகளெல்லாம் சிறகு முளைத்துப் பறந்தோடிப்போன பிறகு ஒரு பையன் ஏணியின்மேலேறி மணிக்குள் கூடாகச் சேர்த்திருந்த வைக்கோல் செத்தை முதலியவைகளை யெல்லாம் அப்பாலெடுத்தெறிந்தான். அப்புறம் அந்த மணி முன்போலவே சரியாக ஒலிக்கத் தலைப்பட்டது.

## தயாரஸம்.

நான் ஒரு சமயத்தில் 'நன்மையாவதென்ன?' என்று ஒருவிதமான சந்தேகங்கொண்டவனுகி அதைப்பற்றிப் பலரையும் கேள்வி கேட்கலானேன்.

அதற்கு 'சட்டதிட்டங்களுக்கு அடங்கியிருப்பதே நன்மையாகும்' என்று நியாய ஸபையார் மறுமொழி சொன்னர்கள்.

'கல்வி யறிவே நன்மையாகும்' என்று வித்தியாசாலைத் தலைவர்கள் விடை கொடுத்தார்கள்.

'உண்மை யுரைத்தலே நன்மை' என்று அறிவுடையோர் உத்தரஞ்சொன்னர்கள்.

'விநோதமும்விளையாட்டுமாயிருப்பதேநன்மை' என்று மூடர்கள் மறுமொழி கூறினர்கள்.

'ஸ்திரீ புருஷர்கள் ஒருவர்மேலொருவர் ஆசையோடிருப்பதே நன்மை' என்று சிறு பெண்கள் சொன்னர்கள்.

'அழகே சிறந்த நன்மையாம்' என்று வேலைக்காரர் சொன்னர்கள்.

'யதேச்சையாயிருப்பதே நன்மை' என்று வீண் மனோராச்சியம் செய்யும் மதிகேடர் மொழிந்தார்கள்.

'வீட்டில் வாழ்வதே நன்மை' என்று காட்டில் திரியும் ஆண்டிகள் உரைத்தார்கள்.

'புகழே பெரிய நன்மை' என்று போர்வீரர் விடை கூறினர்கள்.

'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ
லமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி'

என்று நாயனர் கூறியபடி நடுவு நிலைமையாக நடப்பதே நன்மையென்று தீர்க்கதரிசிகள் சொன்னர்கள்.

இத்தனைபேர் இத்தனைவிதமான ஸமாதானங்கள் சொல்லியும், 'சரியான விடை கிடைக்கவில்லையே' என்று என் மனம் மிகவும் விசனப்பட்டு வருந்தியது. அப்படிப்பட்ட தருணத்தில் எனது தேகத்திற்குள்ளேயே மெதுவான குரல் ஒன்று கிளம்பி, 'அன்புடைமை அல்லது தயாரஸமே உத்தமமானது' என்று உரைத்தது.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.'

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1903.